வாக்குமூலம்

மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை.

முன்னிலை:- திரு. B. ராஜவேல், B.Sc., B.L.,

மாவட்ட நீதிபதி, மயிலாடுதுறை.

அமர்வு வழக்கு எண் 15/2021

| | | | |
|---|---|---|---|
| அரசு தரப்பு சாட்சி | PW5 | நாள் | 12.10.23 |
| பெயர் | முத்துகுமார் | ஜாதி | |
| தந்தை பெயர் | | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | |

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.

முதல் விசாரணை

நான் மயிலாடுதுறையில் குடியிருந்து வருகிறேன். எனது சொந்த ஊர் கொற்கை ஆகும். நான் விவசாயம் செய்து வருகிறேன். நான் கார்காத்த பிள்ளை வகுப்பை சார்ந்தவர். நான் குடிபெயரை சேர்த்து கொள்வது வழக்கம் அல்ல. எனது தந்தை பெயர் திருநாவுகரசுபிள்ளை. எனக்கு சொந்தமாக மாந்தோப்பு உள்ளது. கொற்கை சேர்ந்த கலியமூர்த்தியின் மகன் கார்த்தி என்பவரை தெரியாது. அவர் எனது ஊரை சேரந்தவர் என்று சம்பவத்திற்கு பின்னால் தெரிய வந்தது. எனது மாந்தோப்பில் மாங்காய் திருடு போனது தொடர்பாக புகார் எதுவும் கொடுக்கவில்லை. ஏனென்றால் நான் குத்தகைக்கு கொடுத்துவிட்டேன். சம்பவம் பற்றி எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

அரசு தரப்பில் சாட்சியை பகுதி பிறழ் சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதற்கு அனுமதிப்பக்கப்பட்டது.)

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை

போலிசார் விசாரணையில் கொற்கை கிராமத்தில் எனக்கு சொந்தமாக மாந்தோப்பு உள்ளது என்றும், அந்த மாந்தோப்பில் அடிக்கடி மாங்காய் அடிக்கடி திருட்டு போனது என்றும், அப்போது கலியபெருமாள் மகன் குணசேகரன், கணேசன் மகன் மாணிக்கவாசமும் என் தோப்பில் மாங்காய்களை திருடி சென்றதாக, கலிய மூர்த்தி மகன் கார்த்தி என்பவர் என்னிடம் கூறினார் என்றும், நான் இதைபற்றி விசாரித்ததை தெரிந்துகொண்ட மேற்படி எதிரிகள் இருவரும் 24.06.2019 தேதி இரவு 09.15 மணிக்கு எங்கள் ஊரே சார்ந்த மாரியம்மன் கோவில் சேகர் வீட்டு வாசல் எதிரே நடந்து சென்றுக்கொண்டுயிருந்த கார்த்தியிடம் எதிரிகள் இருவரும் வழிமறைத்து அவதூறாக பேசி தகராறு செய்தார்கள் என்றும், அதை தட்டிகேட்ட சேகர் மற்றும் கார்த்தியின் தந்தை, கார்த்தியின் மனைவி சுந்தரி ஆகியோர்களை தள்ளிவிட்டு கார்த்தியின் நெஞ்சில் கையால் மாறிமாறி அடித்தும், கீழே விழுந்தவரை நெஞ்சில் காலால் மீதித்தும் கொலை செய்ததாக சம்பவம் நடந்த மறுநாள் எனக்கு தகவல் தெரிவித்ததை அடுத்து அரசு மருத்துவமனையில் மணல்மேடு ஆய்வாளர் என்னை விசாரித்தாக நினைவில் இல்லை. தற்போது எதிரிகளுக்கு பயந்து உண்மையை மறைத்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.